அதிமுக முன்னாள் எம்எல்ஏ வீடு, அலுவலகங்களில் ஊழல் தடுப்புப் பிரிவு போலீஸார் சோதனை

சென்னை, செப்.13: அதிமுக முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் தியாகராயநகர் சத்யநாராயணன் வீடு, அலுவலகம் உள்பட மொத்தம் 18 இடங்கள் மற்றும் அதிமுக மாவட்டச் செயலர் ராஜேஷ் வீட்டில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு அதிகாரிகள் புதன்கிழமை நடத்திய சோதனையில் முக்கிய ஆவணங்கள் சிக்கின.

சென்னை ராயபுரத்தைச் சேர்ந்த அரவிந்தகஷன் என்பவர், அதிமுக முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் சத்யநாராயணனுக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார். அதில் 2016 முதல் 2021 சட்டப்பேரவைத் தேர்தலில் சத்யநாராயணன் தாக்கல் செய்த வேட்புமனுவில், அவர் சொத்து மதிப்பை ரூ.2.78 கோடி எனக் குறிப்பிட்டிருந்தார். ஆனால், 2021-ஆம் ஆண்டு தேர்தல் ஆணையத்தில் தாக்கல் செய்த மனுவில், ரூ.16 கோடியே 44 லட்சம் மதிப்பிலான 38 அசையும், அசையா சொத்துகள் இருப்பதாக குறிப்பிட்டுள்ளார். மேலும், அவர் மனைவி ஜெயசித்ரா, மகள் கவிதா பெயரில் உள்ள சொத்துகளை மறைத்ததாகவும் தெரிவித்திருந்தார்.

உயர்நீதிமன்றம் உத்தரவு: இந்த வழக்கை விசாரணைக்கு ஏற்ற உயர்நீதிமன்ற நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ், புகாரில் முகாந்திரம் இருந்தால் வழக்குப் பதிந்து விசாரணை நடத்துமாறு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவுக்கு உத்தரவிட்டார். இதன்பேரில், அதிகாரிகள் விசாரணை நடத்தினர்.

அதில், சத்யநாராயணன் சொத்துகளை மறைத்து சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிட்டது தெரிய வந்தது. அது மட்டுமின்றி சட்டப்பேரவை உறுப்பினராக இருந்த போது சென்னை, கும்மிடிப்பூண்டி, திருவள்ளூர், ஆந்திரம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் குடும்ப உறுப்பினர்களின் பெயர்களில் ஏராளமான சொத்துகளை வாங்கியதும் தெரிய வந்ததாக கூறப்படுகிறது.

18 இடங்களில் சோதனை: இந்த நிலையில், சென்னை வடபழனியில் உள்ள சத்யநாராயணன் வீடு மற்றும் அவருக்கு தொடர்புடைய 16 இடங்கள், கோவையில் ஒரு இடம், திருவள்ளூரில் ஓரிடம் என மொத்தம் 18 இடங்களில் ஊழல் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் புதன்கிழமை காலை 6.30 மணிமுதல் சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது, அசையும் மற்றும் அசையா சொத்துகளை வாங்கியது தொடர்பான ஆவணங்கள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. தியாகராயநகரில் ஒரே முகவரியில் அமைந்துள்ள சத்யநாராயணனின் ரியல் எஸ்டேட் நிறுவனம், அலுவலகங்களிலும் அதிகாரிகள் சோதனை மேற்கொண்டனர்.

சத்யநாராயணன் வீடு, அலுவலகங்களில் நடைபெற்ற சோதனையை அடிப்படையாகக் கொண்டு, அதிமுக மாவட்டச் செயலரான தண்டையார்பேட்டையைச் சேர்ந்த ராஜேஷ் என்பவரின் வீடு மற்றும் அவரின் குடும்ப உறுப்பினர்களின் இடங்களிலும் அதிகாரிகள் சோதனை நடத்தினர்.

இந்தச் சோதனைகளின் அடிப்படையில் சத்தியநாராயணன், வருமானத்துக்கு அதிகமாக சொத்துகளை வாங்கியிருப்பதாக அவர் மீது ஊழல் தடுப்புப் பிரிவினர் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

ஆவணங்கள் சிக்கின: சுமார் 12 மணி நேரத்துக்கும் மேலாக நடைபெற்ற சோதனை மாலை 6 மணியுடன் நிறைவடைந்தது. இதில், சத்திய நாராயணனின் வீடு, அலுவலகங்களிலிருந்து பல்வேறு முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதாகவும், இது குறித்து தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அண்ணாமலையின் யாத்திரையை திசைதிருப்ப திமுக முயற்சி

தமிழக பாஜக இணைப் பொறுப்பாளர் பி.சுதாகர் ரெட்டி

நமது நிருபர்

புது தில்லி, செப். 13: தமிழக பாஜக தலைவர் கே.அண்ணாமலையின் 'என் மண், என் மக்கள்' யாத்திரையை பொதுமக்களிடமிருந்து திசைதிருப்பும் முயற்சியில் திமுக ஈடுபட்டு வருவதாக பாஜகவின் தமிழக இணைப் பொறுப்பாளர் பி.சுதாகர் ரெட்டி தெரிவித்தார்.

தில்லியில் உள்ள பாஜக தேசியத் தலைமை அலுவலகத்தில், அண்ணாமலையின் 'என் மண் - என் மக்கள்' யாத்திரை தொடர்பான செய்தியாளர்கள் சந்திப்பு நடைபெற்றது. அப்போது செய்தியாளர்களிடம் பி. சுதாகர் ரெட்டி கூறியதாவது:

ராமேசுவரத்தில் கடந்த ஜூலை 28-ஆம் தேதி மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, தமிழக பாஜக தலைவர் அண்ணாமலையின் 'என் மண் என் மக்கள்' யாத்திரையை தொடங்கிவைத்தார். பொதுமக்களிடம் இருந்து கிடைக்கும் பெரும் அளவிலான வரவேற்பால் தற்போது இந்த யாத்திரை மக்கள் யாத்திரையாக மாறியுள்ளது.

தில்லி பாஜக தலைமையகத்தில் புதன்கிழமை செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த தமிழக பாஜக இணைப் பொறுப்பாளர் சுதாகர் ரெட்டி, துணைத் தலைவர் நாராயணன் திருப்பதி .

அண்ணாமலை மேற்கொள்ளும் இந்த யாத்திரையால் அரசியல் காழ்ப்புணர்வு கொண்ட திமுக, தமிழக மக்களை திசைதிருப்பும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. சநாதன தர்மம் இந்து மக்களின் வாழ்க்கை நெறி. உலக அளவில் பிரதமர் மோடியின் புகழையும், தமிழகத்தில் பாஜகவின் வளர்ச்சியைப் பொறுத்துக் கொள்ள முடியாத திமுக, சநாதன தர்மம் குறித்து சர்ச்சையை ஏற்படுத்துகிறது.

'இந்தியா' கூட்டணியில் திமுகவுடன் அங்கம் வகிக்கும் காங்கிரஸ் கட்சி அமைச்சர் உதயநிதி ஸ்டாலினையும், திமுகவையும் இந்த விவகாரத்தில் கண்டிக்காதது ஏன் என்றார் பி. சுதாகர் ரெட்டி.

அண்ணாமலையால் மாற்றம்: தமிழக பாஜக துணைத் தலைவர் நாராயணன் திருப்பதி கூறுகையில், 'தமிழ்நாட்டு அரசியலில் மிகப்பெரிய மாற்றத்தை பாஜக தலைவர் அண்ணாமலை ஏற்படுத்தி வருகிறார். இரண்டாம் கட்டத்தில் உள்ள அவரது 'என் மண் என் மக்கள்' யாத்திரை 55 சட்டப்பேரவைத் தொகுதிகளையும்,11 மக்களவைத் தொகுதிகளையும் அடைந்துள்ளது.

கடந்த 9 ஆண்டுகளில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு செயல்படுத்திய சமூக நலத் திட்டங்களால் தமிழகம் எவ்வாறு வளர்ச்சி அடைந்துள்ளது குறித்து 5 லட்சம் புத்தகங்களை தமிழகம் முழுவதும் பொதுமக்களிடம் விநியோகித்து வருகிறோம். இந்த யாத்திரையில் கொண்டு செல்லப்படும் புகார் பெட்டியில் திமுக மீது ஆயிரக்கணக்கில் மக்கள் ஊழல் புகார்களை அளிக்கின்றனர் என்றார்.

பாஜக கூட்டணிக் கட்சிகள் கூட்டம்: இபிஎஸ் இன்று தில்லி பயணம்

சென்னை, செப்.13: பாஜக கூட்டணிக் கட்சிகள் கூட்டத்தில் பங்கேற்பதற்காக, அதிமுக பொதுச்செயலர் எடப்பாடி பழனிசாமி வியாழக்கிழமை தில்லிக்கு புறப்பட்டுச் செல்கிறார்.

மக்களவைத் தேர்தலை முன்னிட்டு, பாஜக கூட்டணிக் கட்சிகளின் கூட்டம் தில்லியில் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இதில் எடப்பாடி பழனிசாமியும் பங்கேற்கவுள்ளார். இதற்காக சென்னையிலிருந்து விமானம் மூலம் அவர் வியாழக்கிழமை காலை தில்லி செல்லவுள்ளார்.

இந்தக் கூட்டத்தில் முக்கிய அறிவிப்புகள் வெளியிடப்படும் எனத் தெரிகிறது. கூட்டத்துக்குப் பிறகு மத்திய அமைச்சர் அமித்ஷா, பாஜக தேசியத் தலைவர் ஜெ.பி.நட்டா ஆகியோரை எடப்பாடி பழனிசாமி தனியாகச் சந்தித்து பேசவுள்ளார்.

அப்போது மக்களவைத் தேர்தலுக்கான தொகுதிப் பங்கீடுகள் குறித்து ஆலோசிக்கப்பட வாய்ப்பு இருப்பதாகக் கூறப்படுகிறது.

இணைய சூதாட்ட தடையை எதிர்த்த வழக்குகள் தீர்ப்புக்காக ஒத்திவைப்பு

சென்னை, செப். 13: தமிழக அரசின் இணைய சூதாட்ட தடைச் சட்டத்துக்கு எதிராக இணைய விளையாட்டு நிறுவனங்கள் தொடுத்த வழக்குகளை தேதி குறிப்பிடாமல் தீர்ப்புக்காக சென்னை உயர்நீதிமன்றம் ஒத்திவைத்தது.

தமிழக அரசு நிறைவேற்றிய இணைய சூதாட்ட தடைச் சட்டத்தை எதிர்த்து, அகில இந்திய விளையாட்டு கூட்டமைப்பு நிறுவனங்கள் சார்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குகள் தொடுக்கப்பட்டன. இந்த வழக்குகளை விசாரித்த உயர்நீதிமன்றம் தமிழக அரசு பதிலளிக்க உத்தரவிட்டிருந்தது. இந்த வழக்குகள் விசாரணையின் போது, இணைய விளையாட்டு நிறுவனங்கள் தரப்பில், இந்த சட்டத்தை இயற்ற தமிழக அரசுக்கு அதிகாரமில்லை. திறமைக்கான விளையாட்டான ரம்மியை, அதிருஷ்டத்துக்கான விளையாட்டாக கருத முடியாது என வாதங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

தமிழக அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பதில் மனுவில், 'இந்திய அரசியல் சாசனம் வழங்கியுள்ள அதிகாரத்துக்கு உள்பட்டு இயற்றப்பட்டுள்ள இந்த சட்டம் செல்லுபடியாக கூடியது. பொது அமைதி, சுகாதாரம் மற்றும் சூதாட்டம் தொடர்பாக மட்டுமே இந்த சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இந்த சட்டத்தை இயற்ற மாநில அரசுக்கு முழு அதிகாரம் உள்ளது.

இணைய விளையாட்டுகள் காரணமாக வேலையில்லாத இளைஞர்கள், தினக்கூலிகள், ஆட்டோ ஓட்டுநர்கள், போலீஸ் என 32 பேர் தற்கொலை செய்து கொண்ட நிலையில் இந்த சட்டம் அவசியமாகிறது' என அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கில், வாதங்கள் நிறைவடைந்த நிலையில், எழுத்துபூர்வ வாதங்களை தாக்கல் செய்ய உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த வழக்கு தலைமை நீதிபதி கங்காபுர்வாலா மற்றும் நீதிபதி ஆதிகேசவலு ஆகியோர் அடங்கிய அமர்வில் புதன்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது, இணைய விளையாட்டு நிறுவனங்கள் தரப்பிலும், தமிழக அரசு தரப்பிலும் எழுத்துபூர்வ வாதங்கள் தாக்கல் செய்யப்பட்டன. இதையடுத்து, வழக்கை தேதி குறிப்பிடாமல் தீர்ப்புக்காக ஒத்திவைத்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

SBI STATE BANK OF INDIA

Premises & Estate Department
Local Head Office, 16, College Lane, Chennai - 600006.
Tel : 044 28308404 / 8415

REPLACEMENT OF OLD TRANSFORMER

SBI invites applications from the electrical contractors for the proposed replacement of old 800KVA transformer at SBI- LHO, Chennai. For details and to download application, log on to **https://bank.sbi** under **"SBI IN THE NEWS → PROCUREMENT NEWS"**. The last date for submission is 30.09.2023. Corrigendum, if any, will be published in the website only.

Chennai - 14.09.2023 ASSISTANT GENERAL MANAGER (P&E)

பொது அறிவிப்பு

இப்பொது அறிவிப்பின் மூலம் பொது மக்களுக்கு தெரிவித்துக் கொள்வது என்னவென்றால், தமிழ்நாடு, காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூர் தாலுக்கா, பெருங்குடி கிராமம், புல எண் 36/16B2 ல், அடித்தளம் + ஸ்டில்ட் தளம் + 2 லெவல் வாகனம் நிறுத்தம் (2 level of parking) + 3 வது மாடி முதல் 19 வது மாடி வரை கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு கட்டுமான விரிவாக்கத்திற்காக மாநில சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீடு ஆணையத்தால் (SEIAA) சுற்றுச் சூழல் அனுமதியை பெற்றுள்ளோம் என்று பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப் படுகிறது. மேற்படி அனுமதிக்கான நகல்கள் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தில் (TNPCB) கிடைக்கும் மற்றும் கீழ்கண்ட இணையதள முகவரியிலும் காண கிடைக்கும் என்றும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இணையதளம்:
http://environmentclearance.nic.in/Staterecord.aspx?State_Name=Tamil%20Nadu
(கடிதத எண்: SEIAA-TN/F.No.9218/EC/8(a)/901/2023 நாள் 27.01.2023)

M/s. ஜெயின் ஹவுசிங் & கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் லிமிடெட்,
No.98 & 99, ஹபிபுல்லா சாலை,
தி. நகர், சென்னை - 600 017.

இடம்: சென்னை
நாள்: 14.09.2023

தெற்கு ரயில்வே

திருவனந்தபுரம் (கதி சக்தி பிரிவு)
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் TVC/GSU/15/2023 தேதி 11/09/2023

தலைமை திட்ட மேலாளர்/கதி சக்தி/ திருவனந்தபுரம் கோட்டம், திருவனந்தபுரம்-14 அவர்கள், இந்தியக் குடியரசுத் தலைவர் சார்பிலும் அவருக்காகவும், எங்களது மின்னணு ஒப்பந்தப்புள்ளி வலைதளமான www.ireps.gov.in இல் கொடுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பின்படி, பின்வரும் பணிகளுக்கான ஆன்லைன் ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்கிறார். திருவனந்தபுரம் கோட்டத்தின் கதி சக்தி பிரிவில் உள்ள பணிகளுக்கான மின்னணு ஒப்பந்தப்புள்ளிக்கு விண்ணப்பிக்க விரும்பும் ஒப்பந்தப்புள்ளியாளர்கள்/ஒப்பந்ததாரர்கள், www.ireps.gov.in என்ற மின்னணு ஒப்பந்தப்புள்ளி வலைதளத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

வ. எண்	பணியின் பெயர்	தோராய மதிப்பு (₹) (லட்சத்தில்)	பிணை வைப்புத் தொகை (₹)
1.	6 LC கேட்களில் மினி-IPS வழங்குதல் மற்றும் அருகிலுள்ள LCக்களுக்கு IPS வழங்கலை நீட்டிப்பது (9 LCக்கள்), SRR-ERS (KTYM/ALLP) இல் 8 LCக்களில் ELD வழங்குதல் - TVC கோட்டத்தின் KYJ பிரிவு - LC எண். 7 (13/800-900 கி.மீ., TCR PWAY), 24 (35/400-500 கி.மீ, CKI PWAY) & 11 (13/100-200 கி.மீ, ALLP PWAY) இடங்களில் IPS ஹட்.	33.762	67500.00
2.	5 LC கேட்களில் மினி-IPS வழங்குதல் மற்றும் அருகிலுள்ள LCக்களுக்கு IPS வழங்கலை நீட்டிப்பது (4 LCக்கள்), TVC கோட்டத்தின் ERSKTYM/ALLP-KYJ பிரிவில் உள்ள 9 LCக்களில் ELD வழங்குதல் மற்றும் LCக்களில் தேய்ந்து போன மெக்கானிக்கல் கேட்ஜெட்டுகளை மாற்றுதல், MNTT-PVRD பிரிவில் உள்ள LC எண். 14 (20.160 கி.மீ, 16 (22.490 கி.மீ), 17 (25.835 கி.மீ) இடங்களில் IPS ஹட்.	38.154	76300.00
3.	6 LC கேட்களில் மினி-IPS வழங்குதல் மற்றும் அருகிலுள்ள LCக்களுக்கு IPS வழங்கலை நீட்டிப்பது (9 LCக்கள்), SRR-ERS (KTYM/ALLP) இல் 8 LCக்களில் ELD வழங்குதல் - TVC கோட்டத்தின் KYJபிரிவு - LC எண் 24 (44/100 கி.மீ., PVRD PWAY), 25 (45/300-400 கி.மீ, PVRD PWAY) & 3 (80/400-500 கி.மீ, KTYM PWAY) இடங்களில் IPS ஹட்.	33.762	67500.00
4.	TVC கோட்டத்தில் உள்ள 4 LC கேட்களில் மினி-IPS கட்டிடத்தை வழங்குதல்: LC எண் 142 (95.299 கி.மீ, CHPD-KYJ பிரிவு), 145 (95.882 கி.மீ, CHPD-KYJ பிரிவு), 74 (149.732 கி.மீ, PRND-QLN பிரிவு), 573 (202.752 கி.மீ, MQU-KZK பிரிவு)	49.289	98600.00

ஒப்பந்தப்புள்ளி மூடப்படும் தேதி: 03/10/2023 அன்று 11:00 மணி
பணி நிறைவடையும் காலம் (மாதங்களில்): வ. எண் 1 to 4: 6 மாதங்கள்
ஒப்பந்தப்புள்ளியின் மதிப்பு, EMD, பணியிடம் ஆகியவற்றை பற்றிய விவரங்கள் www.ireps.gov.in என்ற மின்னணு வலைதளத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒப்பப்புள்ளி சமர்ப்பிப்பு பற்றிய விவரங்களை தெரிந்து கொள்ள, www.ireps.gov.in என்ற வலைதளத்தை பார்க்கவும். ஒப்பந்தப்புள்ளி மூடப்படும் தேதி: 03/10/2023 அன்று 11:00 மணி.

Follow us on: twitter.com/GMSRailway

L&T Finance

எல்&டி ஃபைனான்ஸ் லிமிடெட்
பதிவு அலுவலகம்: 15வது மாடி, பிஎல் ஸ்ரீஜன் டெக் பார்க், பிளாட் என் 52, பிளாக் டிஎன், செக்டர் V, சால்ட் லேக் சிட்டி, கொல்கத்தா - 700 091, மாவட்டம் 24-பர்கனாஸ் வடக்கு.
CIN No.: U65910WB1993FLC060810
கிளை அலுவலகம்: சென்னை

அடைமானம் வைக்கப்பட்ட சொத்தின் விற்பனைக்கான பொது ஏலம்

எல்&டி ஃபைனான்ஸ் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி செக்யூரிட்டிசேஷன் அண்ட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் ஆஃப் பைனான்சியல் அசெட்ஸ் அண்ட் என்ஃபோர்ஸ்மெண்ட் ஆஃப் செக்யூரிட்டி இன்டரஸ்ட் ஆக்ட் 2002 (54 ஆஃப் 2002) கீழ் மற்றும் மேற்படி சட்டத்தின் கீழ் அவருக்குரிய அதிகாரங்களை பயன்படுத்தி கீழ்க்கண்ட சொத்தை **"இருக்கும் இடம்" மற்றும் "இருக்கும் நிலை"** என்ற அடிப்படையில் **"பொது ஏலம்"** மூலம் கடன் பாக்கி மற்றும் அது சம்பந்தமான கூடுதல் வட்டி, கட்டணங்கள் மற்றும் செலவினங்களை வசூலிக்க ஏலம் விட உள்ளார்.

கடன்தாரர் மற்றும் உப கடன்தாரர் பெயர்	பிணைய சொத்து முகவரி	கடன் கணக்கு எண்	சொத்து கையகப்படுத்தப்பட்ட விவரம்	ரிசர்வ் விலையின் பிணை உறுதிப் பணம் வைப்பு 10% அல்லது அதிகம் (₹)	08.09.2023 அன்று பஒ மொத்தம் நிலுவை பாக்கி தொகை	ரிசர்வ் விலை (₹)	ஆய்வு தேதி	ஏலத்தின் தேதி மற்றும் நேரம்
1. சஞ்ஜீவி ஜே 2. பவானி எல் 3. ஜே. எல். கேட்டரிங் (அதன் உரிமையாளர் சஞ்ஜீவி ஜே மூலம்)	**அட்டவணை - A** சொத்தின் முகவரி - காலியான நிலம் ஒரு வீட்டு மனை உருவாக்கப்பட்டு மற்றும் அறியப்பட்டது **"கான்னிகா காலில்"** தரை தளம்-3, பள்ளிக்கு கட்டிடம் அளவை கிட்டத்தட்ட 977 சதுர அடி. கட்டப்பட்ட பகுதி மற்றும் பிரிக்கப்படாதது 400 சதுர அடி. நிலத்தின் பங்கு மற்றும் ஃப்ளாட் சேர்த்து அதன் பொதுவான மற்றொருவருடைய நிலத்தின் மீது செல்லும் வழியுரிமைகளுடன், சர்வே எண்(கள்), 80/5 - 6540 சதுர அடி. அமைந்துள்ள இடம் எண் 89, வேப்பம்பட்டி கிராமம், திருவள்ளூர் வட்டம், திருவள்ளூர் மாவட்டம், தமிழ்நாடு 602001 காஞ்சிபுரம் பதிவு மாவட்டத்திற்குள் உள்ளது மற்றும் திருவள்ளூர் நுணை பதிவு மாவட்டத்திற்குள் உள்ளது. **உருப்படி எண் 1 அளவை 2450 சதுர அடி நிலம்**	H010202702210806039 & H010202702210806039L	5 ஆகஸ்ட் 2023	ரூ. 2,36,434/-	ரூ. 40,99,465.57/-	ரூ. 23,64,340/-	10/10/2023	19/10/2023 காலை 11 மணி

எல்லைகள்	கிழக்கில்	பாலகரன் மனை, மற்றும்
	மேற்கில்	விஜியராகவலு நாயடு வீடு
	வடக்கில்	பாலகரன் மனை
	தெற்கில்	ஆலமரம் தெரு

அளவை :

எல்லைகள்	கிழக்கில்	70 அடி
	மேற்கில்	70 அடி
	வடக்கில்	35 அடி
	தெற்கில்	35 அடி

உருப்படி எண் 2 அளவை 1079 சதுர அடி நிலம்

எல்லைகள்	கிழக்கில்	பத்மவதிதமம் நாயடு கூட்டு சொத்து
	மேற்கில்	எஸ் காந்தி மனை
	வடக்கில்	பாலகரன் மனை
	தெற்கில்	ஆலமரம் தெரு

அளவை :

எல்லைகள்	கிழக்கில்	70 அடி 0 அங்குலம்
	மேற்கில்	70 அடி 0 அங்குலம்
	வடக்கில்	18 அடி 0 அங்குலம்
	தெற்கில்	14 அடி 5 அங்குலம்

உருப்படி எண் 3 அளவை 3011 சதுர அடி நிலம்

எல்லைகள்	கிழக்கில்	பத்மவதிதமம் நாயடு கூட்டு சொத்து
	மேற்கில்	விஜியராகவலு நாயடு வீடு மற்றும் நிலம்
	வடக்கில்	திரு. பாலகரன் மனை
	தெற்கில்	உருப்படி எண் 1 மற்றும் திரு. வாத்தி நிலம்

அளவை :

எல்லைகள்	கிழக்கில்	55 அடி 0 அங்குலம்
	மேற்கில்	55 அடி 0 அங்குலம்
	வடக்கில்	54 அடி 5 அங்குலம்
	தெற்கில்	55 அடி 0 அங்குலம்

பொது ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

1. மின்னணு ஏல விற்பனை, சர்ஃபேஸி சட்ட பிரிவுகளின் கீழ் மற்றும் பொது மின்னணு ஏல முறை மூலம் https://sarfaesi.E-auctiontiger.net இணையதளம் மூலம் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் ஆன்லைனில் நடத்தப்படுகிறது.
2. இங்கே மேலே குறிப்பிடப்பட்ட நாள் அன்று மற்றும் நேரத்தில் பொது மின்னணு ஏலம் நடத்தப்படும், மேலே குறிப்பிடப்பட்ட பிணை சொத்து **"எங்கே உள்ளது என்பதன் அடிப்படையில்" மற்றும் "எந்த நிலையில் உள்ளது என்பதன் அடிப்படையில்"** விற்கப்படும்.
3. பொது மின்னணு ஏலத்தில் பங்கேற்பதற்காக, உத்தேசித்துள்ள வாங்குபவர்கள் / ஏலதாரர்கள் ஏல படிவத்தை, திருப்பியளிக்கத்தக்க பிணை சொத்தின் ரிசர்வ் விலையின் பிணை உறுதிப் பணம் வைப்பு 10% அத்துடன் பான் அட்டை, நிறுவனம் என்னும் நிலையில் குழு தீர்மானங்கள் மற்றும் முகவரிச் சான்று நகல்களை **17/10/2023** அன்று அல்லது அதற்கு முன்பாக சமர்ப்பிக்க வேண்டும்.
4. பொது மின்னணு ஏலத்தில் வெற்றி பெற முடியாத இதர அனைத்து ஏலதாரர்களின் பிணை உறுதிப் பணம் வைப்பு தொகை பொது மின்னணு ஏலம் முடிவுற்ற 7 நாட்களுக்குள்ளாக எல்&டி ஃபைனான்ஸினால் திருப்பி அளிக்கப்படும். பிணை உறுதிப் பணம் வைப்பு தொகைக்கு எந்த வட்டியும் கிடையாது.
5. மின்னணு ஏலத்தில் வெற்றி பெறும் வாங்குபவர்/ஏலதாரர் அவரது/அதன் ஆஃபரில் 25% தொகையை (இஎம்டி உட்பட) எல்&டி பைனான்ஸ் லிமிடெட் என்ற பெயரில் மதுரையில் பெற்றுக்கதாக டி.டி./பே. ஆ மூலம் **19/10/2023** தேதி அன்று 18.00 மணிக்குள் அல்லது அதற்கு முன்பு அதாவது ஏல தேதி அன்று அல்லது அடுத்த அலுவல் நாளில் அதாவது **20/10/2023** அன்று செலுத்தப்பட்டு அந்த டெபாசிட் தொகை பெற்றுக் கொள்ளப்பட்டதாக எல்&டி பைனான்ஸ் லிட் நிறுவனத்தால் உறுதி செய்யப்பட வேண்டும். இல்லையெனில் விற்பனை தோல்வி அடைந்து விட்டதாக கருதப்பட்டு வெற்றி பெற்ற ஏலதாரரின் இஎம்டி பறிமுதல் செய்யப்படும். வாங்கும் விலையில் மீதி தொகை அதாவது 75% வாங்குபவரால் எல்&டி ஹவுசிங் லிமிடெட்டுக்கு, அசையா சொத்து விற்பனை உறுதி செய்யப்பட்ட பின் பதினைந்தாம் நாள் அன்று அல்லது அதற்கு முன்பாக அல்லது சட்டப்பிரிவுகளின்படி இத்தவை நீட்டிக்கப்படும் காலவரம்பிற்குள் செலுத்தப்பட வேண்டும்.
6. சொத்து ஆய்வு செய்வதற்காக அல்லது அதிக தகவலுக்கு, வாய்ப்புள்ள ஏலதாரர்கள், அங்கீகாரம்பெற்ற அதிகாரியுடன் தொடர்பு கொள்ளலாம், அதாவது **பெயர் - செல்வமணி கந்தர் , தொடர்பு கொள்ளவும் : 8072820646, எல்-டி ஃபைனான்ஸ் லிமிடெட் - அலுவலகம்: கேஜிஎன் டவர்ஸ், 5வது தளம், எண் 62, எதிராஜ் சாலை, எழும்பூர், சென்னை - 600105. மற்றும் சந்தோஷ் திவாரி, தொடர்பு எண் 9920490126, எல்-டி ஃபைனான்ஸ் லிட். அலுவலகம் : 5வது தளம், பிருந்தாவன் பில்டிங், பிளாட் எண் 177, கலினா, சிஎஸ்டி ரோடு, மஸ்ரிடெல் ஹோரும் அருகில், சாந்தாக்ருஸ் (கிழக்கு), மும்பை - 400098.** இந்த ஏலத்தின் எந்த நிலையிலும், அங்கீகாரம்பெற்ற அதிகாரி எந்த காரணத்தையும் குறிப்பிடாமல் மற்றும் எந்த முன் அறிவிப்பும் இன்றி, ஏலத்தை ஏற்கலாம்/ நிராகரிக்கலாம்/ திருத்தலாம்/ ஏலத்தை/சலுகையை ரத்து செய்யலாம் அல்லது தள்ளிப் போடலாம்.
7. வெற்றி பெற்ற வாங்குபவர்/ஏலதாரர் சொத்தை தன்னுடைய பெயரில் சாதகமாக மாற்றிக்கொள்ள பொருந்தும் சட்டத்தின் படி, ஏதேனும் சட்டபூர்வ நிலுவைத் தொகைகள், வரிகள், செலுத்த வேண்டிய கட்டணங்கள், முத்திரை வரி, பதிவு கட்டணங்கள் முதலியவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும்.
8. மேற்கண்ட பாக்கித் தொகைகளுக்கு பொறுப்பான வாங்குபவர்/உத்தரவாதிகள் இந்த விற்பனை அறிவிப்பை, பொது மின்னணு ஏல விற்பனையை நடத்த, செக்யூரிட்டி இன்டரஸ்ட் (என்ஃபோர்ஸ்மெண்ட்) ரூல்ஸ் விதி 8(6) கீழ் ஒரு அறிவிப்பாக கருதும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
9. கடன் வாங்குபவர் (கள்) / உப கடன்தாரர் (கள்) / உத்தரவாதி (கள்) / பிணையதாரர் (கள்) மேலே குறிப்பிட்டபடி கடன் நிலுவையில் உள்ள முழு நிலுவைத் தொகையையும் மேற்கூறிய மின்னணு ஏலத் தேதிக்கு முன்னர் செலுத்தும்படி கேட்கப்படுகின்றனர். அவ்வாறு செலுத்தத் தவறினால், எல்&டி பைனான்ஸ் லிமிடெட், சர்ஃபேஸி சட்டம், 2002 கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின்படி சொத்தை விற்கும்.
10. கடன்தாரர் (கள்) / உப கடன்தாரர் (கள்) / உத்தரவாதி (கள்) / பிணையதாரர் (கள்) / பொது மக்கள் எல்&டி பைனான்ஸ் லிமிடெட் இடும் முன்னரே எழுத்துப்பூர்வமான அனுமதி பெறாமல் சம்பந்தப்பட்ட பிணைய சொத்துக்களை விற்பனை செய்தல், குத்தகைக்கு விடுதல் மற்றும் இதர நடவடிக்கைகளை கையாள்வதில் இருந்து தடைசெய்யப்பட்டுள்ளனர்.

தேதி: 14.09.2023
இடம்: சென்னை

கையெழுத்து/-
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
எல்&டி ஃபைனான்ஸ் லிமிடெட்

மாண்பமை உயர் நீதிமன்றம், சென்னை
(சாதாரண அசல் அதிகார வரம்பு)
C.S.(வணிக பிரிவு) எண். 121/2021
ல்
A எண்கள். 2802 மற்றும் 2803/2022

ஸ்கோடா ஆட்டோ a.s.
திரு வக்லாவா க்ளமென்டா 869
லாடா போஸ்லாவ் II
CZ-293 01 லாடா போஸ்லாவ்
செக் குடியரசு., அதன் பொது அதிகார முகவர் திரு நிதின் கல்ரா என்பவரார் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது.,
அலுவலக முகவரி - மில்லேனியம் ப்ளாஸா, செக்டார் 27, குர்கான், ஹரியானா - 122009
விண்ணப்பதாரர் / வாதி தரப்பு
-எதிர் -

1. M.R. சஞ்சீவி,
எண். 15/5, வேலன் நகர், 1 வது பிரதான சாலை, அரும்பாக்கம், சென்னை - 600106. தமிழ்நாடு
2. மேட்ரிக்ஸ் இன்னோவேடிவ் சர்வீசஸ் இந்தியா பிரைவேட் லிமிட்டெட்.,
பழைய கதவு எண். 5, புதிய கதவு எண். 15 தரை தளம், 1 வது பிரதான சாலை, வேலன் நகர், அரும்பாக்கம், சென்னை - 600106 தமிழ்நாடு., அதன் இயக்குனர் திரு சுப்ரமணி குணசேகரன் என்பவரால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது., DIN எண். 08769657
3. சமுத்திரம் கன்ஸ்யூமர் ப்ராடக்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட்.,
ப்ளாட் எண். 26, அகத்தியர் தெரு. மேற்கு காமகோடி நகர், வளசரவாக்கம், சென்னை - 600087. தமிழ்நாடு அதன் இயக்குனர் திரு பாலகப்ரமணியன் கணேச மூர்த்தி என்பவரால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறது., DIN எண். 08049269
4. ஸ்கோடா எண்டர்ப்ரைசஸ் இந்தியா பிரைவேட் லிமிட்டெட்.,
ப்ளாட் எண். 26,